ජනමාධ්‍ය අමාත්‍යාංශය
வெகுசன ஊடக அமைச்சு
MINISTRY OF MASS MEDIA



# 2018
## වාර්ෂික වාර්තාව
## வருடாந்த அறிக்கை
## ANNUAL REPORT

සැලසිනෙ
செலசினெ
SELACINE
SELACINE TELEVISION INSTITUTE

கௌர வெகுசன ஊடக அமைச்சர்
வெகுசன ஊடக அமைச்சு
கொழும்பு 05.

கௌரவ அமைச்சர் அவர்களே,

**ஆண்டறிக்கை - 2018**

1971 38 ஆம் இலக்க நிதி சட்டத்தின் 14 (1) பிரிவுக்கமைய 2018 டிசம்பர் 31 ஆம் திகதியுடன் முடிவடைந்த ஆண்டுக்கான ஆண்டறிக்கையை செலசினெ தொலைக்காட்சி நிறுவனம் சார்பாக என்னால் இத்தால் சமர்ப்பிக்கப்படுகின்றது.

எஸ்.ஏ.என்.ஆர்.சுபசிங்க
தலைவர் (வேலை பார்க்கும்)
செலசினெ தொலைக்காட்சி நிறுவனம்
கொழும்பு 07.

# உள்ளடக்கம்


| | |
|---|---|
| தூரநோக்கு, பணி, நோக்கம் | 05 |
| தலைவரின் மதிப்புரை | 07 |
| நிறுவனத்தின் தகவல்கள் | 08 |
| நிர்வாக கட்டமைப்பு 2018 மற்றும் தொடர்பு கொள்ளும் விபரங்கள் | 09 |
| ஆண்டறிக்கை- 2018 | 15 |
| நிதியறிக்கைக்கான குறிப்புகள் | 18 |
| வருமான அறிக்கைகள் | 20 |
| ஐந்தொகை | 21 |
| காசுப்பாய்ச்சல் கூற்று | 22 |
| நிதியறிக்கைக்கான கூற்று | 24 |
| 2018ஆம் ஆண்டின் நிதி தொழிற்பாடுகள் தொடர்பான கணக்காய்வாளர்களின் கருத்துக்கள் | 34 |






# தூரநோக்கு, பணி, நோக்கம்

## பணி

நிபுணத்துவத்துக்கு அப்பாற்பட்ட படைப்பாற்றல் மிக்க மனிதவள உதவியுடன் படைப்பாற்றல் மிக்க, திட்டமிட்ட மற்றும் உயர் மட்டத்திலான தொழில்நுட்பத்தினை பயன்படுத்தி அரச நிறுவனங்களுக்காக கட்புல, செவிபுல தொடர்பாடல் மற்றும் வேறு படைப்பாற்றல் மிக்க பிரச்சார சேவைகளை வழங்குவதன் மூலம் இலங்கையின் அபிவிருத்தி,சமூக மற்றும் அரசியல் அபிவிருத்திக்காக தொடர்ச்சியாக பங்களிப்பு வழங்குதல்.

## தூரநோக்கு

அரச இயந்திரத்தின் அபிவிருத்தி மற்றும் செயற்பாட்டு மற்றும் அனைத்து வியாபாரத்துறைகளினதும் வளர்ச்சியினை படைப்பாற்றலுடன் விளம்பரப்படுத்துவதன் மூலம் விளம்பரத்துறையின் முன்னோடியாதல்




## நோக்கம்

நிதி நிலைமையினை உயர்த்துதல்

சந்தை இலாபத்தினை உயர்த்துதல்

நிறுவன காலாசாரத்தினை உயர்த்துவதற்கான உபாயங்களை செயற்படுத்தல்

நிறுவன ஊழியர்கள் மற்றும் தலைவர்களை வளர்ச்சியுறச் செய்தல்








# தலைவரின் மதிப்புரை

செலசினெ தொலைக்காட்சி நிறுவனத்தின் தலைவராகப் பதவியேற்ற பின்னர் செலசினே தொலைக்காட்சி நிறுவனத்தின் 2018 ஆம் ஆண்டின் வருடாந்த அறிக்கைக்கு இந்த செய்தியை வழங்குவதில் பெரு மகிழ்ச்சியடைகிறேன்.

37 வருட பெருமைவாய்ந்த வரலாற்றைக் கொண்ட செலசினே நிர்வாகம், திரும்பிப்பார்க்கும் போது போட்டித்தன்மைமிக்க இந்த வியாபாரச்சந்தையில் போட்டியிட்டு தமக்கென ஒரு இடத்தை பெற்று முன்னேற்றம் அடைந்ததை இந்த 2018 ஆம் ஆண்டுக்கான விற்பனைகள் பிரதிபலிக்கின்றன.

2017 ஆம் ஆண்டில் அடைந்த வருடாந்த விற்பனை வருமானம் இலங்கை ரூபா.637.3 மில்லியன் ஆனதுடன் 2018 ஆம் ஆண்டில் அது ரூபா.597.8 மில்லியனாக குறைந்ததுடன், 2017 ஆண்டிற்கு மேலாக ரூபா.11.0 மில்லியன் இலாபத்தை 2018 ஆம் ஆண்டு பெற்றுக்கொள்ள முடிந்தது. 2018 ஆம் ஆண்டின் நிகர இலாபம் ரூபா.29.7 மில்லியன் என்பதுடன், அது 2017 ஆம் ஆண்டில் ரூபா.1.2 மில்லியன் ஆக இருந்தது. இதன்படி 2018 ஆம் ஆண்டு 2017 ஆம் ஆண்டுடன் ஒப்பிடுகையில் ரூபா 28.5 மில்லியன் நிகர இலாபத்தை பெற்றுக்கொள்ள முடிந்தமை பாராட்டக்கூடிய விடயமாகும்.

2018 ஆம் ஆண்டு வேறுபட்ட வருமான அபிவிருத்தி காட்டப்பட்டதுடன், நிறுவனம் மற்றும் பரிபாலன செலவுகள் ரூபா.3.7 மில்லியனால் 2018 ஆம் ஆண்டு 2017 ஆம் ஆண்டுடன் ஒப்பிடும் போது குறைந்ததுடன், விற்பனை மற்றும் விநியோக செலவுகள் ரூபா. 4.4 மில்லியனால் 2018 ஆம் ஆண்டு 2017 ஆம் ஆண்டுடன் ஒப்பிடும் போது குறைந்துள்ளது.
நிறுவனத்தில் மனிதவள அபிவிருத்திகள் மிகவும் வேகமான வளர்சியடைவதுடன், ஊழியர்களுக்கு வைத்திய காப்புறுதி சலுகைகள் வழங்குதல், விளையாட்டுப்போட்டிகள், வினோத சுற்றுலா பயணங்கள் போன்ற மேலதிக செயற்பாடுகள் மற்றும் விசேட பயிற்சி வழங்கள்கள் போன்ற செயற்பாடுகள் வெற்றிகரமாக இடம்பெற்றது.

கணக்கியல் பிரிவினால் ஆண்டறிக்கையை செய்யும்போது, புதிய தொழிநுட்பங்கள் உபயோகிக்கப்படுவதுடன், ஆண்டறிக்கையை கோரப்பட்ட தினத்தில் வழங்கவும் முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டன.

லேக்ஹவுஸ் நிறுவனத்துடன் விளம்பரங்களை பிரசிக்கும் போது, மிகவும் சிறந்த பல சலுகைகள் கிடைக்கப்பெற்றதுடன், அந்த நிறுனத்திற்கு விளம்பரங்களை வழங்கும் நிறுவனங்களில் முதலிடத்தை பெற்றுக்கொள்ளமுடிந்தமை பெறுமை சேர்க்கும் ஒரு செயற்பாடாகும். அதற்காக வடிவமைப்பு பிரிவினால் சிறந்த தரமான வடிவமைப்புகள் மேற்கொள்ளப்பட்டதுடன், ஊடகப்பிரிவினால் அவை சரியான முறையில் முன்னெடுக்கப்பட்டது.

விற்பனை துறையின் மூலம் நியமிக்கப்பட்ட விற்பனை இலக்குகளை அடைய அவர்களின் அர்ப்பணிப்புடனான சேவை வழங்கப்பட்டதுடன், நிறுவனத்தின் பல்வேறுபட்ட பிரிவுகளின் ஒன்றிணைந்த செயற்பாட்டின் மூலமே இந்த வெற்றிகிடைத்தது. தயாரிப்பு பிரிவினால் நிறுவனத்தின் தன்மையை உயர்த்தும் விதத்திலான பல செயற்பாடுகள் முன்னெடுக்கப்பட்டது. சிறந்த தரம்மிக்க தயாரிப்புக்கள் பலரினதும் கவனத்தை ஈர்த்தமை மிகவும் முக்கியமான ஒரு விடயமாகும்.
நிறுவனத்துடன் புதிதாக இணைந்த வெப் அபிவிருத்தி பிரிவின் மூலம் பல வழிகளிலும் அது தொடர்பான விடையங்களை நிறுவனத்தின் ஊழியர்களுக்கு வழங்கக்கிடைத்தமை சிறந்த செயற்பாடாக கருதப்படுகின்றது.
கடந்த காலத்தில் பொருளாதாரத்தில் ஏற்பட்ட மாற்றங்களுடன் அவற்றை சரிவர கணித்து அதன் மூலம் நிறுவனத்திற்கு தேவையான விதத்தில் இலக்கை அடைய நிறுவனத்தை சரியான திசையை நோக்கி கொண்டு செல்ல உறுதுணையாக இருந்த அனைவருக்கும் எனது நன்றி கலந்த வணக்கங்கள்.



எஸ்.ஏ.என்.ஆர்.சுபசிங்க
தலைவர் (வேலை பார்க்கும்)
செலசினெ தொலைக்காட்சி நிறுவனம்

# நிறுவனத் தகவல்கள்

### பெயர்

செலசினெ தொலைக்காட்சி நிறுவனம்

### சட்டக்கட்டமைப்பு மற்றும் கடந்தகால நிலைமை

- 1982 பெப்ரவரி 01 ஆம் திகதி திட்டங்களை செயற்படுத்தும் அமைச்சின் கீழ் ஆரம்பிக்கப்பட்டது.
- 1982-1989 வரை காணி, நீர்ப்பாசன மற்றும் மகாவெலி அபிவிருத்தி அமைச்சின் கீழிருந்த அரச மரக்கூட்டுத்தாபனத்தின் மனித மற்றும் நிதி வளத்தின் கீழ் மகாவெலி உடனடி அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டம் தொடர்பாக இலங்கை மக்களை தெளிவுபடுத்தும் பணியினை மேற்கொண்டது.
- 1989 ஜனசவிய நிகழ்ச்சித்திட்டத்தினை விளம்பரப்படுத்தும் செயற்பாடுகளை மேற்கொண்டது
- 191989.08.19 ஆம் திகதியுடைய 832/15 இலக்கமுடைய அதிவிசேட வர்த்தமானி அறிவித்தலின் மூலம் செலசினெ நிறுவனம் இளைஞர் விவகாரங்கள், விளையாட்டு மற்றும் கிராம அபிவிருத்தி அமைச்சின் கீழ் கொண்டுவரப்பட்டது. (இது நிறுவனம் தொடர்பாக வர்த்தமானி அறிவித்தல் மூலம் மேற்கொள்ளப்பட்ட முதல் சுவீகரித்தலாகும்).
- 1997.06.09 ஆம் திகதியுடைய 979/2 இலக்கமுடைய அதிவிசேட வர்த்தமானி அறிவித்தலின் மூலம் தபால், தொலைத்தொடர்புகள் மற்றும் ஊடக அமைச்சின் கீழ் கொண்டுவரப்பட்டது.
- 2001.12.20 ஆம் திகதியுடைய 1215/14 இலக்கமுடைய அதிவிசேட வர்த்தமானி அறிவித்தலின் மூலம் மக்கள் தொடர்பாடல் அமைச்சின் கீழ் கொண்டுவரப்பட்டது.
- 2004.04.28 ஆம் திகதியுடைய 1338/9 இலக்கமுடைய அதிவிசேட வர்த்தமானி அறிவித்தலின் மூலம் தகவல் மற்றும் ஊடக அமைச்சின் கீழுள்ள நிறுவனமாக பெயரிடப்பட்டது.
- 2005.12.08 ஆம் திகதியுடைய 1422/22 இலக்கமுடைய அதிவிசேட வர்த்தமானி அறிவித்தலின் மூலம் ஊடக மற்றும் தகவல் அமைச்சின் கீழ் நிறுவனமாக ஸ்தாபிக்கப்பட்டது.
- 2007 07 ஆம் இலக்கமுடைய நிறுவன சட்டத்தின் உள்ளடக்கங்களுக்கு அமைவாக பூரண அரசுடைமையான பொதுநிறுவனமாக மாற்றுவதற்காக அமைச்சரவைக்கு 2008.03.26 ஆம் திகதி கடிதம் சமர்ப்பிக்கப்பட்டது.

### நிறுவனத்தின் பொறுப்புக்கள்

- அரசின் ஊடக விளம்பரப்படுத்தல் மற்றும் தயாரிப்பு நிறுவனமாக செயற்படுதல்
- 2005.05.16 ஆம் திகதி 1380/15 இலக்கமுடைய அதிவிசேட வர்த்தமானி அறிவித்தல் மூலம் கீழ் காட்டப்பட்டுள்ள பணிகள் நிறுவனத்தின் விடயப்பரப்பில் உள்ளடக்கப்பட்டது.
  - i. அச்சு/இலத்திரனியல் விளம்பர தயாரிப்பு
  - ii. அரசின் அபிவிருத்தி செயற்றிட்டங்கள் தொடர்பாக பொது மக்களை தெளிவுபடுத்தும் பிரச்சாரப்பணிகள்
  - iii. அரச பிரச்சார நிகழ்ச்சிகளை தயாரித்தல்
- 2008.12.02 ஆம் திகதியுடைய வெகுசன ஊடக மற்றும் தகவல் அமைச்சர் கடிதம் சம்பந்தப்பட்ட பரீட்சிப்பின் பின்னர் 2008.12.24 ஆம் திகதியுடைய 08/2253/338/043 இலக்கமுடைய அமைச்சரவை பத்திரத்தின் ஊடாக அனைத்து அமைச்சுக்கள் மற்றும் அவற்றின் கீழுள்ள நிறுவனங்களின் அனைத்து விளம்பரங்கள் மற்றும் பிரச்சார நிகழ்ச்சிகளை செலசினெ தொலைக்காட்சி நிறுவனத்தின் ஊடாக மேற்கொள்ளவதை கட்டாயமாக்கும் அனுமதியை பெற்றுக்கொடுத்தது
- தொலைக்காட்சி ஆவண நிகழ்ச்சிகள், வானொலி நிகழ்ச்சிகள் உட்பட தொலைக்காட்சி மற்றும் வானொலி விளம்பரங்கள் போன்ற கட்புல செவிபுல தயாரிப்புக்களை மேற்கொள்ளுதல்
- பத்திரிகை விளம்பரத்தயாரிப்பு உட்பட விளம்பரங்னை அச்சு மற்றும் இலத்திரனியல் ஊடகங்களில் ஒழுங்குபடுத்தல்.
- நிகழ்ச்சி முகாமைத்துவம் மற்றும் அச்சு வேலைகள்.

# நிர்வாகக் கட்டமைப்பு - 2018

### சிரேஷ்ட முகாமைத்துவம்

| | | |
|---|---|---|
| பே.எம்.என்.எஸ். ஜெயவர்தன | - | தலைவர் (2018.01.21 - 2018.05.04) |
| உமா ராஜமந்திரி | - | தலைவி (2018.05.17 - 2018.10.26) |
| பே.எம்.என்.எஸ். ஜெயவர்தன | - | தலைவர் (2018.11.11 - 2018.12.30) |
| மஞ்சுள ஹேரத் | - | பொது முகாமையாளர் |

### நிர்வாகிகள்

| | | |
|---|---|---|
| இ.எம்.ஏ.ஆர்.ஏக்கநாயக்க | - | முகாமையாளர் (மனிதவளம் மற்றும் நிர்வாகம்) (2018.01.01 - 2018.10.17) |
| எச்.எம்.யூ.பீ.சீ ஹேரத் | - | முகாமையாளர் (மனிதவளம் மற்றும் நிர்வாகம்) (2018.10.15 - 2018.12.31) |
| சுனந்த வீரசிங்க | - | முகாமையாளர் (தயாரிப்பு) |
| அக்போ அமரசேகர | - | வாடிக்கையாளர் சேவை பணிப்பாளர் |
| நலீன் அலஹகோன் | - | முகாமையாளர் (ஊடகப்பிரிவு) |
| சாந்த லொகுகெட்டகொட | - | முகாமையாளர் (நிதி) |
| சுஜித் புஷ்பகுமார | - | முகாமையாளர் (வரைகலைப்பிரிவு) |
| ஆய்.எல்.பீ.பிரனாந்து | - | முகாமையாளர்- (அதிவேக அச்சிடல்) |
| இந்திக விஜேதுங்க | - | முகாமையாளர்- (கொள்வனவு மற்றும் விநியோகித்தல்) |

### தணிக்கை

அரச கணக்காய்வாளர் அதிபதியின் திணைக்களம்

### வங்கியாளர்

இலங்கை வங்கி

மக்கள் வங்கி

### தொடர்பு விபரங்கள்

| | | |
|---|---|---|
| **முகவரி** | - | இல. 224, பௌத்தாலோக்க மாவத்தை, கொழும்பு 07 |
| **தொலைபேசி** | - | 011-4320777, 011-4061586 |
| **தொலைநகல்** | - | 011-2058229 |
| **மின்னஞ்சல்** | - | selacine@gmail.com |
| **இணையத்தளம்** | - | www.selacine.lk |

## நிர்மான மற்றும் வரைக்கலை பிரிவு

செலசினெ நிறுவனத்தின் திறமையான மற்றும் புதுபடைப்புகளை முன்வைக்கும் மற்றுமொரு பிரிவு நிர்மான மற்றும் வரைகலைப்பிரிவேயாகும். இப்பிரிவில் முன் அனுபவம் கொண்ட பல கலைஞர்களை கொண்ட இப்பிரிவு நிர்மானங்களுக்காக வெறும் எட்டு மணி நேரம் மாத்திரம் வேலையை செய்யாமல் எந்நேரத்திலும் ஆயத்தமாக இருக்கும் ஒரு பிரிவாகும். வரைகலையின் புதிய தொழிநுட்பங்களை கொண்டு செயற்படும் இப்பிரிவானது எந்நேரத்திலும் முன்நின்று செயற்படுவதுடன், நேரத்தை மிஞ்சியும் செயற்படும் ஒரு பிரிவாகும்.

பத்திரிக்கை விளம்பரங்களை வடிவமைத்தல், முப்பரிமாண செயற்பாடுகள், ஆண்டறிக்கை மற்றும் வெவ்வேறுபட்ட வெளியீடுகள், சுவரொட்டிகள் மற்றும் பெனர் நிர்மானம் போன்ற செயற்பாடுகளின் இடமாக திகழ்வது நிர்மான மற்றும் வரைகலைப்பிரிவேயாகும் அத்துடன் வழங்கப்படும் வேலைகளை சரியான நேரத்திற்கு எமக்கு மீளக்கையளிப்பதுடன் வாடிக்கையாளர்களிடம் இருந்து கிடைக்கும் பாராட்டிற்கு முக்கிய காரணமும் அவர்களே.

லேக்ஹவுஸ் நிறுவனத்தினால் வெளியிடப்படும் விளம்பரங்களில் அதிகபடியான விளம்பரங்களை வழங்குவது எமது நிறுவனம் என்பதோடு அவற்றை நிர்மானிப்பதில் முக்கிய இடம் நிர்மான மற்றும் வரைகலைப் பிரிவையே சாரும். குறிப்பிட்ட நேரத்திற்குள் சரியான, நேர்த்தியான விளம்பரங்களை நிர்மானிக்கும் பொறுப்பை சரியாக நிறைவேற்றி வருவதுடன் சரியாக தனது கடமைகளை செய்து வருகின்றது.

தனது சேவையை மெம்மேலும் நிறுவனத்திற்கு வழங்குவது மட்டுமல்லாமல், தமது செயற்திறனை மேலும் அபிவிருத்தி அடையச்செய்து 2017 ஆம் ஆண்டும் மிகவும் வெற்றிகரமாக செயற்பட எத்தணிக்கின்றது..

## ஊடகப்பிரிவு

ஊடகப்பிரிவின் முக்கிய செயற்பாடான இலத்திரனியல் ஊடகங்களின், விளம்பரங்கள் மற்றும் காட்சி வடிவமைப்பு செயற்பாடுகளை அட்டணையிட்டு மேற்கொள்வதேயாகும். அது அனைத்து ஆண்டுகளிலும் அதிக இலாபத்தை கொண்டுவரும் ஒரு பிரிவாக இருப்பது அட்டவணையிடல் மூலமேயாகும். அதன் மூலம் 2018 ஆம் ஆண்டிலும் சிறப்பாக மேற்கொள்ளப்பட்டுள்ளது. இங்கு முதலீடு ரூபா.435,925,412.29 ஆகும்.

2018 ஆம் ஆண்டு லேக்ஹவுஸ் நிறுவனத்திற்கு அதிக விளம்பரங்கள் வழங்கப்பட்டுள்ளது. அதனால் எமக்கு சிறப்பு விலைக்கழிவுகளும் கிடைக்கப்பெறுகின்றது.

மேலும் தொலைக்காட்சி மற்றும் வானொலி அட்டவணைப்படத்தலின் படி எமக்கு சிறப்பு விலைக்கழிவுகள் கிடைக்கப்பெறுவதுடன் மேலும் சமூக ஊடக இணையத்தளங்களிலும் எமது ஊடக அட்டவணையிடல் மேற்கொள்ளப்படுகின்றது.

அதன்படி இலங்கை முதல்தர விளம்பர நிறுவனம் ஒன்று என்ற அடிப்படையில் எமது நிர்மான செயற்பாடகள் மட்டுமல்லாமல் விளம்பரத்திறனில் அதி உயரிய நிலையை செலசினே தொலைக்காட்சி நிறுவனம் தன்வசம் கொண்டுள்ளது.

## விற்பனை மற்றும் வாடிக்கையாளர் சேவைப்பிரிவு

2018 ஆம் ஆண்டு நிறைவுபெற்ற நிதியாண்டுடன் ரூபா.597.8 மில்லியன் விற்பனை பிரிவின் மூலம் ஈட்டப்பட்டுள்ளது. இது 2017 ஆம் ஆண்டுடன் ஒப்பிடும் போது பின்னடைவை சந்தித்துள்ளமையை ஏற்றுக்கொள்ள வேண்டியதுடன், அதற்கு முக்கிய காரணியாக அமைந்தது நாட்டில் இருந்த நிலையற்ற அரசியல் காரணிகளேயாகும்.

இவ்வாறான கடினமான நிலையிலும் நிறுவனத்தில் அனைத்து பிரிவுகளின் உதவியுடன் விற்பனை பிரிவு பெற்றுள்ள முன்னேற்றம் வரவேற்கத்தக்கது.

## மனிதவள மற்றும் நிர்வாகப்பிரிவு

எமது முக்கியமான மற்றும் உயரிய சொத்தாக அமைவது எமது மனிதவளமேயாகும். நிறுவனத்தின் வளர்ச்சிப்பாதையில் முன்னோக்கி செல்ல மற்றும் தமது இலக்குகளை அடைய மனிதவளத்தின் மூலம் சிறந்ததொரு ஒத்துழைப்பை பெற்றுக்கொள்ள நிர்வாக பிரிவின் மூலம் 2018 ஆம் ஆண்டும் பெற்றுக்கொள்ள மேற்கொள்ளப்பட்ட செயற்பாடுகளே இவை.

- 36 வருட வரலாற்றுக்கு உரிமை கோரும் செலசினெ தொலைக்காட்சி நிறுவனத்தின் சட்டபூர்வமாக்கும் செயற்பாடுகள் தற்போது இறுதிக்கட்டத்தை எட்டியுள்ளது. மேலும் எதிர்காலத்தை பற்றி அதிகம் சிந்தித்து செயற்படுவதுடன் அதற்கு ஏற்றாற் போல் ஆட்சேர்ப்புக்களை மேற்கொள்வதற்கு செயற்பாடுகள் மேற்கொள்ளப்படுகின்றது.

- சிறந்த பயிற்சி வழங்கும் செயற்பாடுகள் மற்றும் சிறந்த தொழில்சார் செயற்பாடகளை அதிகரிக்க கூடிய விதத்திலான சுற்றுச்சூழலை உருவாக்குவதன் மூலம் நிறுவனத்தின் ஊழியர்குழாத்தின் உத்வேகத்தை அதிகரித்தல், அவர்கள் கொண்டுள்ள திறமைகளை சரிவர கணித்து அவர்களின் நம்பிக்கையை அதிகரித்த அதன் மூலம் நிறுவனத்தின் வளர்ச்சிக்கு அவர்களால் வழங்கக்கூடிய ஒத்துழைப்பை பெற்றுக்கொள்வதுடன் அவர்களின் தனிப்பட்ட வளர்ச்சியையும் ஒப்போதும் ஒத்துழைப்பு வழங்கி மேம்படுத்தல்.

- நிறுவனத்தின் ஊழியர் நலத்திற்காக அதிக பிரதிலாபங்களுடன் கூடிய சுகாதார காப்புறுதி முறைகளை வழங்குதல், ஊழியர்களுக்கு கடன்களை பெற்றுக்கொடுத்தல், விழாக்கால சலுகைகள், சிறப்பு கொடுப்பனவுகள் என அவர்களின் வாழ்க்கை முறைமையில் வளர்ச்சியை அதிகரித்தல்.

- நிறுவனத்திற்கு சிறந்த மற்றும் உயரிய சேவையை பெற்றுக்கொடுக்க அவர்களுக்கு முறையான மற்றும் சிறந்த காரியாலய உபகரணங்களை வழங்கி செயற்பாடுகளை விரைவாக்கல்.

# தயாரிப்பு பிரிவு

செலசினெ நிறுவனம் ஆரம்பம் முதலே காட்சி ரீதியான தயாரிப்பு பிரிவு ஆரம்பத்தில் இருந்தே ஆக்கபூர்வமான படைப்புக்களை முன்னெடுத்தல் பெரும் பெருமைக்குரிய விடயமாகும்.

2018 ஆம் ஆண்டு ஊவா மாகாண சபைக்கு மேற்கொள்ளப்பட்ட அறிக்கை வேலைத்திட்டங்கள், சுகாதார அமைச்சிக்கு மேற்கொள்ளப்பட்ட அறிக்கைகள், வடமேற்கு மாகாண சபைக்காக நிர்மானிக்கப்பட்ட அறிக்கைகள் மற்றும் கொழும்பு அதிவேக வீதிகள், அபிவிருத்தி லொத்தர் சபை, இலங்கை சதொச நிறுவனம் போன்ற நிறுவனங்களுக்கான அமைக்கப்பட்ட விற்பனை விளம்பரங்களே சிறந்த முதல்நிலை விளம்பரங்களாகும்.

2017 ஆம் ஆண்டின் முதற்பாதியில் செலசினெ நிறுவனத்தின் வருமானத்தில் தயாரிப்பு பிரிவு வழங்கிய ஒத்துழைப்பின் 2018 ஆம் ஆண்டு இறுதி காலாண்டுடன் ஒப்பிடும் போது அது 11% அதிகரிப்பை காட்டுவதுடன் செலசினெ நிறுவனத்தின் அதிக இலாப சதவீதத்தை பெற்றுக்கொடுத்த பிரிவாக தயாரிப்பு பிரிவு அமைந்தது பெரும் பெருமைக்குறியதே.

# நிதிப்பிரிவு

நிதிச்சேவைகளை சரியான முறையில் கொண்டு செல்வதற்கு நிதிப்பிரிவானது எப்பொழுதும் செயற்படுகின்றது. அதன் பிரதிபலனாக கணக்காய்வு வினவல்களை குறைக்கக்கூடியதாக இருத்தல், கடந்த காலத்திற்கான ஆண்டறிக்கைகளை பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்க தேவையான படிகளை முன்னெடுத்தல் பாராட்டத்தக்கது.

ஆண்டறிக்கைகளை அமைத்தல், தகவல் தொழில்நுட்ப அமைச்சு மற்றும் தணிக்கைக்கு விரைவாக வழங்குதல், அரச வியாபார திணைக்களம் போன்றவற்றிற்கு விரைவாக வழங்க படிமுறைகளை மேற்கொள்ளல்.

கணக்காய்வாளரின் கருத்து 2011,2012,2015 2016 மற்றும் 2017 போன்ற ஆண்டுகளில் அரச கணக்கியல் கொள்கைகளுக்கு இணங்க சத்திய மற்றும் சாதாரண நிலையை காட்டும் கணக்காய்வாளரின் கருத்தை முன்வைப்பதற்கான சிறந்த செயற்பாட்டை நிதிப்பிரிவு மேற்கொண்டுள்ளது. இந்த நிலையை பேணவும் இதற்கு மேற்பட்ட சிறந்த ஒரு முன்னேற்றத்தை பெறவும் நிதிப்பிரிவு திட்டங்களை முன்னெடுத்துவருகின்றது.






# நிகழ்ச்சி முகாமைத்துப்பிரிவு

2015 ஆம் ஆண்டு செலசினெ தொலைக்காட்சி நிறுவனத்தினால் புதிதாக ஆரம்பிக்கப்பட்ட பிரிவே நிகழ்ச்சி முகாமைத்துவப்பிரிவு. அரச மற்றும் தனியார் துறைகளின் நிகழ்ச்சி திட்டமிடல்கள் இப்பிரிவினால் மேற்கொள்ளப்படுகின்றது. 2018 ஆம் ஆண்டு எமது நிறுவனத்தினால் மேற்கொள்ளப்பட்ட நிகழ்ச்சி திட்டமிடல்கள்களின் படி இலங்கை சுற்றுலாத்துறை அபிவிருத்தி அதிகாரசபையின் "டுக் டுக்" நிகழ்ச்சி திட்டமிடல் ரூபா. 2 மில்லியன் பெருமதிமிக்க ஒரு செயற்பாடாகும். அதேபோல் வெகுசன அமைச்சினால் நடாத்தப்பட்ட வெகுசன ஊடக விருதுகள்- 2018 ரூபா.8 மில்லியன் பெறுமதியானதாகும். அதேபோல் ரோயல் கல்லூரியினால்" ஒழுங்கு செய்யப்பட்ட என்ட்டர்ப்ரைசஸ் ஸ்ரீலங்கா கண்காட்சியின் நிதியமைச்சின் கண்காட்சி கூடம் ரூபா.4 மில்லியன் பெறுமதி கொண்டதாகும். அதே போல் நிதியமைச்சினால் முன்னெடுக்கப்பட்ட "சங்ஹிதியாவ" தொடர்பான செயற்திட்டத்தில் "கேளுங்கள்" வேலைத்திட்டம் மூன்று பிரதேசங்களில் இடம் பெற்றதுடன், அதன் பெறுமதி ரூபா.14 மில்லியன் ஆனதுடன், நிகழ்ச்சி திட்டமிடல்கள்களுக்கு மேலாக இலங்கை மின்சார சபையினால் ஒழுங்கு செய்யப்பட்ட வெவ்வேறு நிகழ்சிசகளின் பெறுமதி ரூபா.6 மில்லியனாகும்.

2017 ஆம் ஆண்டுக்கு நிகராக இந்த ஆண்டு நிகழ்ச்சி திட்டமிடல்கள் பிரிவு பாரிய வளர்ச்சியை கண்டுள்ளதுடன், 2019 ஆம் ஆண்டு புதிய பல தொழில்நுட்ப வளர்ச்சிகளுடன் தொழில்நுட்ப விதங்களை பாவித்து, புதிய நிகழ்ச்சி திட்டமிடல்கள் வாய்ப்புக்களை இணங்கண்டு மேலும் அதிக வருமானம் ஈட்ட தயார்...






**நிதியறிக்கை 2018**

வருமான வளர்ச்சி




கடந்த 05 வருடங்களினுள் வருமானம் மற்றும் செலவு



## 2014-2018 ஆம் வருடங்களுக்கிடையில் நிறுவனத்தின் இலாபப்போக்கு

5 ஆண்டு காலத்தில் வருமானம் மற்றும் நேரடி செலவுகளின் போக்கு






# நிதி அறிக்கைக்கான குறிப்புக்கள்

**2018 டிசம்பர் மாதம் 31 ஆம் திகதி முடிவடைந்த ஆண்டுக்கான**

**1. பொதுவானவை**

1.1 நிறுவனத் தகவல்கள்

செலாசினெ தொலைக்காட்சி நிறுவனமானது (இதன் பின்னர் செலாசினே என்று அழைக்கப்படும்) 2019.02.26 ஆம் திகதி இல 2112/13 எனும் இலக்கமுடைய அதி விசேட வர்த்தமானி அறிவித்தல் மூலம் நிதி மற்றும் வெகுசன ஊடகத்துறை அமைச்சின் விடயதானத்தின் கீழ் உள்ளடக்கப்பட்டுள்ளது.

1.2 பிரதான செயற்பாடுகள் மற்றும் நடவடிக்கைகளின் தன்மை

நிறுவனத்தின் பிரதான செயற்பாடுகள் விளம்பரப்படுத்தல், தொலைக்காட்சி, வானொலி நிகழ்ச்சிகள் தயாரிப்பு மற்றும் நிகழ்ச்சி ஒழுங்கமைப்பு என்பனவாகும்.

1.3 ஊழியர்களின் எண்ணிக்கை

2018.12.31 ஆம் திகதியில் உள்ளவாறு 64 ஊழியர்கள் பணியாற்றியுள்ளார்கள்.

**2. கணக்கியல் கொள்கை தொடர்பில் முக்கிய அம்சங்களின் சாராம்சம்**

2.1 பொதுவான கொள்கைகள்

இந் நிதிக்கூற்றுக்கள் இலங்கை பட்டயக் கணக்காளர் நிறுவனத்தினால் வெளியிடப்பட்ட இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களுக்கமைய தயாரிக்கப்பட்டதாகும். இலங்கை ரூபாவில் தயாரிக்கப்பட்டுள்ள நிதிசார் கூற்றுக்கள் தொடர்ந்து இயங்கும் நிறுவனம் என்ற அடிப்படையில் தயாரிக்கப்பட்டது.

2.2 நிலைத்தன்மை மற்றும் ஒப்பீடு

இவ் வருடத்தில் பின்பற்றப்பட்ட கணக்கீட்டுக் கொள்கைள் முந்திய வருடங்களில் பின்பற்றப்பட்ட கணக்குக் கொள்கைகளுடன் இணக்கப்பாடானதாக உள்ளது.

2.3 கடன் செலவுகள

கடன் செலவுகள் அவை மேற்கொள்ளப்பட்ட காலப்பகுதியில் எந்தத் தொகையும் மூலதனமாக்கப்படாது செலவினமாக இனங்காணப்பட்டுள்ளது.

**3. சொத்து மதிப்பிடுதலும், அவை மதிப்பிடும் அடிப்படையும்**

3.1 ஆதனங்கள், பொறித் தொகுதி மற்றும் சாதனங்கள்

செலவு அல்லது அளவு மதிப்பீட்டின் அடிப்படையில் ஆதனங்கள், பொறித்தொகுதி மற்றும் சாதனங்கள் அறிக்கையிடப்பட்டுள்ளன.

3.2 வியாபார மற்றும் ஏனைய கிடைக்கவேண்டியவை

வியாபார மற்றும் ஏனைய கிடைக்கவேண்டியவை மதிப்பிடப்பட்ட தீர்வைப் பெறுமதி அடிப்படையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

3.3 காசும், காசுக்கு சமமானவையும்

காசும், காசுக்கு சமமானைவும் என்பது கையிலுள்ள காசு மற்றும் கோரிக்கை வைப்புக்களையும், துரித கதியில் தெரிந்த பெறுமானத்தில்காசுக்கு மாற்றக்கூடியதாகவும், பெறுமான மாற்றத்தில் குறிப்பிடப்பட்ட தீங்கெதனையும் விளைவிக்காததும், கூடிய திரவத் தன்மையுடைய குறுகிய கால முதலீடுகளுமாகும்.

3.4 தேய்மானம்

தேய்மானமானது ஒவ்வொரு சொத்தினதும் அதன் மதிப்பிடப்பட்ட பயன்பாட்டுக் காலப் பகுதிக்குள்ளானவாறு நேர்கோட்டு முறையின் பிரகாரம் வருமானக் கூற்றில் இனங்காணப்பட்டுள்ளது. நிதிக் குத்தகையின் கீழுள்ள சொத்துக்கள், குத்தகைக் காலப் பகுதியின் குறுகிய காலத்திற்கும், சமமான சொந்தச் சொத்துக்களின் பயன்பாட்டு காலப் பகுதிக்கும் ஏற்ப தேய்மானம் செய்யப்பட்டுள்ளன. நிலையான சொத்துக்களுக்குரிய தேய்மான விகிதம் திருத்தப்பட்டுள்ளது.

சமகால மற்றும் ஒப்பீட்டளவு காலப் பகுதிக்கு மதிப்பீடு செய்யப்பட்ட பயன்பாட்டு காலம் வருமாறு:

தளபாடங்களும் பொருத்துதலும் 10 வருடங்கள்
கணனி சாதனங்கள் 5 வருடங்கள்
அலுவலக சாதனங்கள் 10 வருடங்கள்
மோட்டார் வாகனங்கள் 5 வருடங்கள்
புகைப்படக் கருவி, படமெடுக்கும் சாதனங்கள் 10 வருடங்கள்
கணனி மென்பொருட்கள் 10 வருடங்கள்

**4. பொறுப்புக்களும், ஒதுக்கீடுகளும்**

4.1 ஐந்தொகை தினத்திலிருந்து ஒரு வருட காலத்திற்குள் செலுத்தவேண்டியவை அல்லது கோரிக்கை அடிப்படையில் செலுத்தவேண்டிய கடப்பாடுகள் என்பன நடைமுறைப் பொறுப்புக்களென ஐந்தொகையில் வகைப்படுத்தப்பட்டுள்ளன. ஐந்தொகைத் திகதியிலிருந்து ஒரு வருட காலத்திற்குப் பின்னர் முடிவடையவுள்ள கடப்பாடுகள் நடைமுறைப் பொறுப்புக்கள் அல்லாதவையாக வகைப்படுத்தப்பட்டுள்ளன.

4.2 ஓய்வூதிய, நலன்புரி செலவுகள்

ஊழியர்கள் பிரதிலாபங்கள் - LKAS 19 (2006 இல் திருத்தப்பட்டது) ஊழியர் நலன்புரிக்கமைய சகல ஊழியர்களுக்கும் சேவையின் முதலாவது வருடத்திலிருந்து ஓய்வூதிய நலன்புரிகளுக்கான ஒதுக்கம் ஏற்படுத்தப்பட்டுள்ளது.

எவ்வாறாயினும் 1983 ஆம் ஆண்டு 12 ஆம் இலக்க பணிக்கொடைச் சட்டத்திற்கமைய தொடர்ச்சியாக 05 வருட சேவையினைப் பூர்த்திசெய்த பின்னரே ஊழியர் ஒருவருக்கான பொறுப்பு ஏற்புடையதாகிறது.

4.3 நிர்ணயிக்கப்பட்ட பங்களிப்புத் திட்டங்கள் - ஊ.சே.நி மற்றும் ஊ.ந.நி

நியதிச் சட்டங்களுக்கும் பிரமாணங்களுக்கும் அமைய ஊழியர்கள், ஊழியர் சேமலாப நிதி பங்களிப்புகள் மற்றும் ஊழியர் நம்பிக்கை நிதிய பங்களிப்புகளுக்கு தகுதியுடையவர்களாவார்கள். இந் நிறுவனமானது ஊழியர்களின் மொத்த வேதனாதிகளின் 15% மற்றும் 3% க்கான தொகையினை முறையே ஊழியர் சேமலாப நிதியத்திற்கும், ஊழியர் நம்பிக்கை நிதியத்திற்கும் பங்களிப்பு செய்கிறது.

**5 வருமானக் கூற்று**

5.1 மொத்த விற்பனவு

செலசினெயின் மொத்த விற்பனையானது கலை வேலைப்பாடுகள், அட்டவணைப்படுத்தல், தொலைக்காட்சி மற்றும் வானொலி நிகழ்ச்சிகள் தயாரிப்பு, நிகழ்வு முகாமைத்துவம், மற்றும் சமூக ஊடகங்களிலிருந்து பெறப்படுகின்றவையாகும்.

5.2 வருமானம் இனங்காணல்

செலசினெயின் மொத்த விற்பனையானது கலை வேலைப்பாடுகள், அட்டவணைப்படுத்தல், தொலைக்காட்சி மற்றும் வானொலி நிகழ்ச்சிகள் தயாரிப்பு, நிகழ்வு முகாமைத்துவம், மற்றும் சமூக ஊடகங்களிலிருந்து பெறப்படுகின்றவையாகும்.

5.3 செலவு இனங்காணல்

வருமானக் கூற்றில் செலவுகளானது ஏற்பட்ட செலவுக்கும், வருமானத்தின் குறிப்பிட்ட விடயங்களுக்கான உழைப்பிற்கும் இடையிலான நேரடித் தொடர்பின் அடிப்படையில் இனங்காணப்பட்டுள்ளது.

**6. சம்பந்தப்பட்ட நபர்களுடனான கொடுக்கல் வாங்கல்**

நிதிக்கூற்றில் குறிப்பிடப்பட்டுள்ள காலப் பகுதியில் எந்தவொரு சம்பந்தப்பட்ட நபர்களுடனும் எவ்வித கொடுக்கல் வாங்கல்களும் செய்யப்படவில்லை.

**7. ஐந்தொகைத் திகதியின் பின்னர் இடம்பெறும் நிகழ்வுகள்**

ஐந்தொகைத் திகதியின் பின்னர் நிதிக் கூற்றுக்களில் சீராக்கல்களையோ, வெளிப்படுத்தல்களையோ செய்யவேண்டிய அளவிலான நிகழ்வுகள் இடம்பெறவில்லை.

**8. இலங்கை மத்திய வங்கியின் அறிவுறுத்தல்களின்படி பிரமுக வங்கியில் வைப்பிலிடப்பட்டிருந்த ரூபா 300,000 இலங்கை வங்கி சேமிப்பு கணக்கிற்கு மாற்றப்பட்டுள்ளது.**

**9. அறவிடமுடியாத மற்றும் ஐயமான கடன்பட்டோருக்காக 2.5% மும், இனங்காணப்படாத கடன்பட்டோர் ஆண்டு 2006 க்காக முழுமையயாகவும் ஒதுக்கங்கள் செய்யப்பட்டுள்ளன.**

**10.** **10.1** இரண்டு ஊழியர்களுக்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

**10.2** இங்கு குறிப்பிடப்பட்ட கணக்காய்வு கோரிக்கைகளுக்கு நிறுவனத்தின் சொத்துக்கள் 2019 இல் மதிப்பீடு செய்யப்பட்டு இறுதிக் கணக்கில் பதிவு செய்யப்படும்.




# வருமான அறிக்கை

**2018 டிசம்பர் மாதம் 31 ஆம் திகதி முடிவடைந்த வருமான அறிக்கை இலங்கை ரூபாவின் படி**

| | குறிப்புகள் | 2018<br>ரூபா. | 2017<br>ரூபா. | 2016<br>ரூபா. |
|---|---|---|---|---|
| வருமானம் | **11** | **597,861,538.10** | **637,351,163.32** | **397,692,282.97** |
| நேர் செலவுகள் | **12** | 490,793,242.38 | 541,297,909.69 | 342,085,817.84 |
| **மொத்த இலாபம் / நட்டம்** | | **107,068,295.72** | **96,053,253.63** | **55,606,465.13** |
| ஏனைய வருமானம் | **13** | 13,822,647.07 | 4,379,747.31 | 4,783,264.44 |
| | | **120,890,942.80** | **100,433,000.94** | **60,389,729.57** |
| நிர்வாக மற்றும் தாபனச் செலவுகள் | **14** | (67,378,237.30) | (71,096,270.58) | (62,608,575.31) |
| விற்பனை மற்றும் விநியோக செலவுகள் | **15** | (21,892,667.18) | (26,231,866.42) | (17,086,815.43) |
| **நடைமுறையிலிருந்து இலாபம்** | | **31,620,038.31** | **3,104,863.94** | **(19,305,661.17)** |
| நிதிசார் மற்றும் ஏனைய செலவுகள் | **16** | (224,807.66) | (124,084.60) | (180,985.45) |
| ஏனைய செலவுகள் | **17** | (1,690,794.00) | (1,770,342.59) | (6,142,345.59) |
| **வரிவிதிப்புக்கு முன்னரான தேறிய இலாபம்/நட்டம்** | | **29,704,436.65** | **1,210,436.75** | **(25,628,992.21)** |
| **வரிவிதிப்புக்கு பின்னரான தேறிய இலாபம்/நட்டம்** | | **29,704,436.65** | **1,210,436.75** | **(25,628,992.21)** |
| ஆண்டுக்கான ஏனைய விரிவான வருமானம் | | - | - | - |
| **ஆண்டுக்கான மொத்த விரிவான வருமானம் இலாபம் / நட்டம்** | | **29,704,436.65** | **1,210,436.75** | **(25,628,992.21)** |

# ஐந்தொகை

31 டிசம்பர் 2018 அன்று உள்ளவாறான

| | குறிப்புகள் | 2018 ரூபா. | 2017 ரூபா. | 2016 ரூபா. |
|---|---|---|---|---|
| **சொத்துக்கள்** | | | | |
| **நடைமுறை அல்லாதவை** | | | | |
| ஆதனங்கள், பொறித்தொகுதிகள், சாதனங்கள் | 18 | 9,703,764.59 | 11,170,153.95 | 12,608,937.31 |
| தொட்டுணர முடியாத சொத்துக்கள் | 18-A | 3,559,605.76 | 3,460,377.76 | 3,999,830.83 |
| கட்டட செலவுகள் | | 1,842,062.05 | 3,684,124.10 | 5,526,186.14 |
| **மொத்த நடைமுறை அல்லாத சொத்துக்கள்** | | **15,105,432.40** | **18,314,655.81** | **22,134,954.28** |
| **நடைமுறை** | | | | |
| முதலீடுகள் | 19 | 20,898,200.00 | 898,200.00 | 898,200.00 |
| வியாபாரம் கிடைக்கவேண்டியவை | 20 | 465,547,234.05 | 390,651,319.86 | 214,490,075.74 |
| ஏனைய கிடைக்கவேண்டியவை | 21 | 1,395,510.60 | 1,662,656.66 | 1,944,593.80 |
| கையிலும், வங்கியிலும் உள்ள காசு | 22 | 13,380,385.01 | 31,416,455.80 | 8,559,416.92 |
| **நடைமுறை சொத்துக்கள** | | **501,221,329.66** | **424,628,632.32** | **225,892,286.46** |
| **மொத்த சொத்துக்கள்** | | **516,326,762.06** | **442,943,288.13** | **248,027,240.74** |
| **ஒப்புரவும், பொறுப்புக்களும்** | | | | |
| **ஒப்புரவு** | | | | |
| நிறுத்திவைக்கப்பட்ட இலாபம்/நட்டம் | | 109,791,825.84 | 70,209,475.81 | 57,883,448.68 |
| **மொத்த ஒப்புரவு** | | **109,791,825.84** | **70,209,475.81** | **57,883,448.68** |
| **பொறுப்புக்கள்** | | | | |
| **நடைமுறை அல்லாதவை** | | | | |
| செலுத்தவேண்டிய பணிக்கொடை | 23 | 11,919,393.60 | 9,692,481.86 | 8,639,956.56 |
| வட்டியுடனான கடன்களும், கடன்படலும் | 24 | - | - | |
| திறைசேரி கடன் | | - | - | 465,000.00 |
| **மொத்த நடைமுறை அல்லாத பொறுப்புக்கள்** | | **11,919,393.60** | **9,692,481.86** | **9,104,956.56** |
| **நடைமுறை** | | | | |
| வட்டியுடனான கடன்களும், கடன்படலும் | 24 | - | - | |
| வியாபாரமும், செலுத்தவேண்டிய ஏனையவையும் | 25 | 394,485,990.62 | 362,911,778.46 | 179,049,283.50 |
| திறைசேரி கடன் | | - | - | 1,860,000.00 |
| பெற்றுக்கொண்ட முற்பணம் | | 129,552.00 | 129,552.00 | 129,552.00 |
| **நடைமுறை பொறுப்புக்கள்** | | **394,615,542.62** | **363,041,330.46** | **181,038,835.50** |
| **மொத்த ஒப்புரவும், பொறுப்புக்களும்** | | **516,326,762.06** | **442,943,288.13** | **248,027,240.74** |

1971 ஆம் ஆண்டு 38 ஆம் இலக்க நிதிச் சட்டத்தின் பிரகாரமும், இலங்கை பட்டய கணக்காளர் நிறுவனத்தினால் ஏற்படுத்தப்பட்ட இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமனங்களின் தேவையின் பிரகாரமும் இந்த நிதிக் கூற்றுக்கள் தயாரிக்கப்பட்டுள்ளன.

பொதுமுகாமையாளர்- செலசினே தொலைக்காட்சி நிறுவனம்

இந்த நிதி அறிக்கை அமைத்தல் மற்றும் முன்வைத்தலுக்கான பொறுப்பு பணிப்பாளர் சபையைச் சாரும் என்பதோடு அதற்காக பணிப்பாளர் சபையினால் கீழ் கையெழுத்திட்டப்பட்டுள்ளது.

தலைவர்
செலசினெ தொலைக்காட்சி நிறுவனம்

# காசுப் பாய்ச்சல் கூற்று

**2018 டிசம்பர் 31 ஆம் திகதி முடிவடைந்த ஆண்டுக்கான இலங்கை ரூபாவில் குறிப்பிடப்பட்டுள்ளது.**

| | | 2018<br>ரூபா. | 2017<br>ரூபா. |
|---|---|---|---|
| **நடைமுறை செயற்பாடுகளிலிருந்து காசுப் பாய்ச்சல்** | | | |
| வரிவிதிப்புக்கு முன்னரான தேறிய இலாபம் | | 29,704,436.65 | 1,210,436.75 |
| **சீராக்கல்** | | | |
| குத்தகை வட்டி | | - | |
| வட்டி வருமானம் | | (536,796.08) | (99,309.82) |
| தேய்மானம் | 3,170,873.00 | 4,001,678.11 | |
| பணிக்கொடைக்கான ஏற்பாடு | | 2,797,621.74 | 1,052,525.30 |
| வெளியேற்றப்பட்ட ஆதனம் மீதான இலாபம்/நட்டம் | | - | 61,369.34 |
| முன்னைய ஆண்டுகளில் சீராக்கல்கள் | | 9,877,913.38 | 11,115,590.38 |
| **தொழிற்படுமுதல் மாற்றத்திற்கு முன்னரான செயற்பாட்டு இலாபம்** | | **45,014,048.69** | **17,342,290.06** |
| வியாபாரம் மற்றும் ஏனைய கிடைக்கவேண்டியவையில் (அதிகரிப்பு/குறைவு) | | (73,122,256.14) | (177,126,051.07) |
| வைப்புக்கள் மற்றும் முற்செலுத்தப்பட்டவையில் (அதிகரிப்பு/குறைவு) | | 267,146.06 | 281,937.14 |
| வியாபார கடன் மற்றும் பிற கொடுப்பனவுகளின் (அதிகரித்தல்/குறைவடைதல்) | | 31,574,212.16 | 183,862,494.96 |
| முற்பணம் பெற்றுக்கொண்டதில் (அதிகரிப்பு/குறைவு) | | - | - |
| கட்டட செலவுகளுக்கான ஏற்பாடு (அதிகரிப்பு/குறைவு) | | - | - |
| **செயற்பாட்டுக்கு (பயன்படுத்திய) பெறப்பட்ட காசு** | | **3,733,150.77** | **24,360,671.09** |
| செலுத்தப்பட்ட பணிக்கொடை | | (570,710.00) | - |
| **செயற்பாட்டு நடவடிக்கைகளிலிருந்து/பயன்படுத்திய தேறிய காசு** | | **3,162,440.77** | **24,360,671.09** |
| முதலீட்டு நடவடிக்கைகளிலிருந்து காசுப் பாய்ச்சல் | | | |
| ஆதனங்கள், பொறித்தொகுதிகள், சாதனங்கள் கொள்வனவு | | (1,735,307.64) | (1,602,942.02) |
| வட்டி வருமானம் | | 536,796.08 | 99,309.82 |
| நிலையான வைப்புக்கள் | | (20,000,000.00) | - |
| **முதலீட்டு நடவடிக்கைகளிலிருந்து (பயன்படுத்திய)/தேறிய காசு** | | **(21,198,511.56)** | **(1,503,632.20** |
| **திறைசேரி கடன் கிடைக்கப்பெற்றது/திருப்பி செலுத்தியது** | | | |
| கடன்கள் திருப்பிச் செலுத்தியது | - | - | |
| கடன்கள் திருப்பிச் செலுத்தியது | | - | - |
| குத்தகையில் பிழை திருத்தம் | | - | - |
| **நிதி நடவடிக்கைகளிலிருந்து / பயன்படுத்திய தேறிய காசு** | | **-** | **-** |
| காசிலும், காசுக்கு சமமானவற்றிலும் தேறிய குறைவு | | **(18,036,070.79)** | **22,857,038.89** |
| வருட ஆரம்பத்தில் காசும், காசுக்கு சமமானவையும் (குறிப்பு அ) | | 31,416,455.80 | 8,559,416.91 |
| **வருட முடிவில் காசும், காசுக்கு சமமானவையும் (குறிப்பு அ)** | | **13,380,385.01** | **31,416,455.80** |






## காசுப் பாய்ச்சல் கூற்று

**2018 டிசம்பர் 31 ஆம் திகதி முடிவடைந்த ஆண்டுக்கான இலங்கை ரூபாவில் குறிப்பிடப்பட்டுள்ளது.**

| | | 2018<br>ரூபா. | 2017<br>ரூபா. |
|---|---|---|---|
| குறிப்பு அ | | | |
| **காசும், காசுக்கு சமமானவையும்** | | | |
| இவ. - க.இல. - 2323299 | | 7,540,695.27 | 29,724,501.94 |
| இவ. - சேமிப்பு க.இல - 2329765 | 315,207.27 | 291,145.04 | |
| மக்கள் வங்கி 200100130005980 | | 3,467,878.97 | 791,574.32 |
| தயாரிப்பு முற்பணம் | | 1,881,603.50 | 424,234.50 |
| ஏனைய முற்பணம் | | 175,000.00 | 185,000.00 |
| | | **13,380,385.01** | **31,416,455.80** |

## ஒப்புரவில் மாற்றங்கள் பற்றிய கூற்று

**2018 டிசம்பர் 31 ஆம் திகதி முடிவடைந்த ஆண்டுக்கான இலங்கை ரூபாவில் குறிப்பிடப்பட்டுள்ளது.**

| | 2018<br>ரூபா. |
|---|---|
| | பேணிய இலாபம் |
| 2018 ஜனவரி 01 அன்று மீதி | 70,209,475.81 |
| முன்னைய ஆண்டுகளில் சீராக்கல்கள் - குறிப்பு | 9,877,913.38 |
| ஆண்டில் தேறிய இலாபம் / நட்டம் | 29,704,436.65 |
| **2018 டிசம்பர் 31 ஆம் அன்று மீதி** | **109,791,825.84** |

# நிதிசார் கூற்றுக்களுக்கான குறிப்புகள்

**2018 டிசம்பர் 31 ஆம் திகதி முடிவடைந்த ஆண்டுக்கான இலங்கை ரூபாவில் குறிப்பிடப்பட்டுள்ளது.**

| | 2018<br>ரூபா.. | 2017<br>ரூபா. | 2016<br>ரூபா. |
|---|---|---|---|
| **குறிப்பு - 11 - வருமானம்** | | | |
| தயாரிப்பு | 64,274,782.71 | 32,661,878.25 | 19,865,749.83 |
| வரைவியல் | 44,104,237.11 | 48,299,073.00 | 13,492,843.62 |
| அட்டவணை தயாரித்தல் | 435,925,412.29 | 405,675,446.93 | 314,834,334.00 |
| நிகழ்வு முகாமைத்துவம் | 52,042,205.99 | 150,487,265.14 | 48,150,355.52 |
| நானாவிதமானவை | 7,500.00 | 82,500.00 | 84,000.00 |
| வலை வருமானம் | 1,507,400.00 | 145,000.00 | 1,265,000.00 |
| | **597,861,538.10** | **637,351,163.32** | **397,692,282.97** |
| **குறிப்பு - 12 - நேரடி செலவுகள்** | | | |
| தயாரிப்பு செலவுகள் | 43,229,765.58 | 28,656,917.64 | 17,141,833.00 |
| வரைவியல் செலவுகள் | 40,018,353.15 | 33,511,635.16 | 13,965,362.04 |
| அட்டவணை தயாரித்தல் செலவுகள் | 358,077,255.35 | 347,405,543.49 | 272,997,261.84 |
| நிகழ்வு முகாமைத்துவம் செலவுகள் | 48,115,268.30 | 131,586,313.40 | 36,804,690.96 |
| வலை செலவுகள் | 1,352,600.00 | 137,500.00 | 1,176,670.00 |
| நானாவிதமானவை | - | - | - |
| | **490,793,242.38** | **541,297,909.69** | **342,085,817.84** |
| **குறிப்பு - 13 - ஏனைய வருமானங்கள்** | | | |
| விசேட தரகு கிடைத்தல் | 12,097,784.00 | - | - |
| பணியாளர் கடன் வட்டி | 136,066.99 | 116,790.59 | 107,321.49 |
| வங்கி வட்டி | 536,796.08 | 99,309.82 | 145,449.20 |
| சொத்துக்கள் விற்பனை (இலாபம்/ நட்டம்) | - | - | - |
| ஏனைய வருமானம் | 243,000.00 | 3,531,849.90 | 4,425,393.75 |
| வழங்குதல் பதிவு | 632,000.00 | 312,000.00 | 9,500.00 |
| மொழிப்பெயர்ப்பு கட்டணங்கள் | 75,000.00 | - | 80,000.00 |
| கலை வேலை கட்டணங்கள் | 65,000.00 | 281,000.00 | - |
| போக்குவரத்து கட்டணங்கள் | 37,000.00 | 38,797.00 | 15,600.00 |
| | **13,822,647.07** | **4,379,747.31** | **4,783,264.44** |






# நிதிசார் கூற்றுக்களுக்கான குறிப்புகள்

**2018 டிசம்பர் 31 ஆம் திகதி முடிவடைந்த ஆண்டுக்கான இலங்கை ரூபாவில் குறிப்பிடப்பட்டுள்ளது.**

| | 2018<br>ரூபா. | 2017<br>ரூபா. | 2016<br>ரூபா. |
|---|---|---|---|
| **குறிப்பு - 14 - நிர்வாக மற்றும் தாபன செலவுகள்** | | | |
| கொடுப்பனவுகள் | 16,400.00 | - | |
| படி - தலைவர் | 1,447,555.64 | 1,547,928.00 | 1,500,000.00 |
| படி - ஒப்பந்த சேவைகள் | 673,180.88 | 945,924.66 | 712,150.00 |
| படி - பயிற்சி பெறுபவர்கள் | 120,250.00 | 176,250.00 | 652,133.36 |
| படி - போக்குவரத்து | 800,000.00 | 900,000.00 | 560,000.00 |
| படி - எரிபொருள் | 329,110.32 | 290,065.26 | 448,100.32 |
| படி - மொபைல்கள் | 150,548.39 | 156,000.00 | 156,000.00 |
| கணக்காய்வு கட்டணம் | 250,000.00 | 120,000.00 | 110,000.00 |
| சபை கூட்ட கட்டணம் | 13,604.00 | - | |
| மிகையூதியம்- பணிப்பாளர் சபை | 142,500.00 | 45,000.00 | - |
| மிகையூதியம் | 1,293,348.00 | 662,125.00 | 680,500.00 |
| கட்டட செலவுகள் | 1,842,062.05 | 1,842,062.04 | 1,842,062.04 |
| கட்டட வாடகை செலவுகள் - திரைப்படக் கூட்டுத்தாபனம் | 3,780,000.00 | 3,780,000.00 | 3,780,000.00 |
| கட்டட வாடகை செலவுகள் - ராஜகிரிய அலுவலகம் | - | 733,335.84 | 565,390.32 |
| சுத்தம் மற்றும் சுகாதாரத்துக்கான பொருட்கள் செலவு | 103,298.94 | 80,186.00 | 119,658.00 |
| கணனி திருத்தவேலை செலவு | 217,750.00 | 26,480.00 | 118,041.11 |
| ஆலோசனை கட்டணம் | 17,415.00 | 50,000.00 | - |
| தேய்மானம் | 2,421,396.00 | 2,641,533.37 | 2,230,019.53 |
| பணிப்பாளரின் வரும்படி | 484,408.69 | 505,500.00 | 647,483.33 |
| நன்கொடை | 207,500.00 | 553,400.00 | 453,199.56 |
| மின்சாரம் | 705,469.10 | 790,952.95 | 462,481.24 |
| ஊ.செ.நி | 2,876,767.26 | 2,541,168.90 | 2,436,156.27 |
| ஊ.ந.நி | 881,740.37 | 507,727.05 | 429,730.96 |
| வெளிநாட்டு பயணம் | - | - | 298,759.80 |
| கொடை உறுதிச்சீட்டு செலவு | 378,830.00 | 646,847.50 | 288,000.00 |
| பணிக்கொடை | 2,779,683.74 | 1,184,500.55 | 2,534,524.27 |
| இணைய கட்டணம் | 339,451.57 | 447,271.63 | 203,030.66 |
| தொழிலாளர் செலவு | 36,000.00 | 39,895.00 | - |
| நானாவித செலவுகள் | 1,350.00 | 11,000.00 | - |
| புதின பத்திரிகைகள் | 94,625.00 | 118,145.00 | 60,492.00 |
| அலுவலக சாதன பராமரிப்பு | 145,544.52 | 79,135.00 | 81,088.00 |
| அலுவலக பராமரிப்பு செலவு | 625,912.49 | 672,398.47 | 96,466.00 |
| அபராதமும் மேலதிகக் கட்டணமும் | - | 102,564.57 | 6,510.20 |
| தபாற்செலவு | 14,550.70 | 28,970.00 | 38,141.00 |
| அச்சிடுதலும் காகிதாதிகளும் | 1,621,862.03 | 1,475,598.52 | 1,534,437.69 |




# நிதிசார் கூற்றுக்களுக்கான குறிப்புகள்

**2018 டிசம்பர் 31 ஆம் திகதி முடிவடைந்த ஆண்டுக்கான இலங்கை ரூபாவில் குறிப்பிடப்பட்டுள்ளது.**

| | 2018<br>ரூபா. | 2017<br>ரூபா. | 2016<br>ரூபா. |
|---|---|---|---|
| தொழில்சார் கட்டணம் | 30,000.00 | - | - |
| புதுப்பித்தல் கட்டணம | - | 12,000.00 | 27,500.00 |
| பதிவுக் கட்டணம் | 103,035.00 | 90,665.00 | 119,000.00 |
| உபசார செலவுகள் | 1,740.00 | - | - |
| சம்பளங்களும் கூலிகளும் | 34,465,547.39 | 37,732,241.83 | 31,958,987.77 |
| பாதுகாப்பு சேவைகள் செலவு | 722,252.00 | 1,073,830.00 | 1,151,172.00 |
| இட வாடகை (தற்காலிகமானது) | 31,000.00 | 3,000.00 | - |
| பணியாளர் காப்புறுதி | 2,259,260.66 | 2,545,397.07 | 1,451,568.31 |
| பணியாளர் மேலதிக நேரமும் படியும் | 2,369,962.74 | 2,231,596.43 | 1,775,515.02 |
| பணியாளர் நலன் | 882,590.69 | 868,703.05 | 793,292.59 |
| தொலைபேசி கட்டணம் | 424,842.41 | 577,366.85 | 515,270.46 |
| கேள்வி கட்டணம் | 56,600.00 | 24,500.00 | 32,000.00 |
| பயிற்சி நிகழ்ச்சி கட்டணம் | 31,200.00 | 118,250.00 | 447,865.60 |
| மொழிபெயர்ப்பு கட்டணம் | 437,397.50 | 209,800.00 | 261,500.00 |
| வாகன வாடகை | 460,000.00 | 1,605,000.00 | 780,000.00 |
| நீர் | 285,694.22 | 284,155.04 | 156,927.90 |
| வலைகடப்பிடம் செலவு | 5,000.00 | 17,800.00 | 17,920.00 |
| | **67,378,237.30** | **71,096,270.58** | **62,608,575.31** |

**குறிப்பு - 15 - விற்பனை மற்றும் விநியோக செலவுகள்**

| | | | |
|---|---|---|---|
| கலைவேலை செலவு | 480,400.00 | 2,001,522.00 | 95,000.00 |
| அறவிடமுடியாத கடன் | 1,864,995.28 | 2,994,377.69 | (601,208.77) |
| ஒருங்கிணைப்பு கட்டணம் | - | 485,510.00 | 170,900.00 |
| ஆக்கபூர்வ முகவர் கமிஷன்கள் | 279,645.63 | - | |
| தேய்மானம் - மோட்டார் வாகனம் | 134,479.00 | 708,191.67 | 1,567,164.80 |
| எரிபொருள் | 815,531.18 | 789,748.34 | 837,935.89 |
| மோட்டார் வாகன திருத்தவேலையும், பராமரிப்பும் | 689,321.37 | 924,967.40 | 1,111,799.26 |
| அச்சிடும் படிக்கட்டு செலவு | 83,250.00 | 68,254.00 | 14,587.00 |
| விற்பனை தரகு | 781,255.71 | 1,748,539.59 | 921,832.46 |
| விற்பனை உயர்ச்சியும், விளம்பர செலவும் | 79,160.00 | 526,365.69 | 85,630.00 |
| விசேட கழிவு | 16,105,880.68 | 15,196,477.91 | 12,467,591.92 |
| விசேட நிகழ்வு செலவு | - | 444,800.00 | - |
| விசேட அறவிடல் ஆணைக்குழு | - | 5,000.00 | - |
| முத்திரை கட்டணம் | 18,950.00 | 16,355.40 | - |
| பிரயாண போக்குவரத்தும், தரிப்பும் | 160,047.24 | 174,448.82 | 215,143.96 |
| வாகன காப்புறுதி | 399,751.09 | 147,307.91 | 200,438.91 |
| | **21,892,667.18** | **26,231,866.42** | **17,086,815.43** |

# நிதிசார் கூற்றுக்களுக்கான குறிப்புகள்

